**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

நாள் 10.06.2026

அசல் வழக்கு எண். 220/2022

பி.சா.1 – சத்தியவேல், த/பெ. ஆறுமுகம் என்பவரின் முதல் விசாரணை

தொடர்ச்சி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

1. 06.01.2018 தேதியில் நான் 1ம் வாதி பச்சையம்மாளுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குமரகோட்டம் கிளையின் காசோலை ரூ.1,50,000/- கொடுத்ததற்கான காசோலை வங்கி சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 01.12.2017 முதல் 01.12.2018 வரையான எனது வங்கி கணக்கு விவர கணிணி நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன். 1ம் வாதி பச்சயைம்மாளுக்கு எனக்கும் எத்தனை ஆண்டுகளாக கொடுக்கல் வாங்கல் பண பரிவர்த்தனை உள்ளது என்றால் வழக்கு பரிவர்த்தனை தவிர வேறு கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை. நான் வேறு நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வங்கியில்தான் கடன் பெற்றுள்ளேன். நான் வங்கியில் என்ன கடன் பெற்றுள்ளேன் என்றால் சொத்தின் பேரில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளேன். நான் கொடுக்கல் வாங்கல் செய்யும்போது அதனை முறைப்படியாகத்தான் செய்வேன் என்றால் சரிதான். சொத்தினை அடமானம் வைத்து கடன் பெற்று அதனை பைசல் செய்துவிடுவேன். எந்த ஒரு கடன் வாங்கினாலும் செலுத்தினாலும் அதனை முறைப்படி அதனை வரவு வைப்பதை பற்றியோ அதனை பைசல் செய்தது பற்றி ஆவணங்கள் ஏற்படுத்துயுள்ளேனா என்றால் உள்ளேன். ஆவணங்கள் ஏற்படுத்தி அசல் ஆவணங்களை பச்சையம்மாளிடம் கொடுத்துள்ளேன்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அடமான பத்திரமானது நான் 1ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 28.12.2017ல் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பி.சா.ஆ.1ன் படியாக 06.01.2018ல் 1ம் வாதிக்கு காசோலை மூலம் பணம் கொடுத்ததாக சொல்லி உள்ளதற்கு மேற்படி வா.சா.ஆ.3ல் வரவு வைக்க 1ம் வாதியிடம் கேட்டேனா என்றால் நான் காசோலையாக கொடுத்ததால் அது பற்றி கேட்கவில்லை. அதன்பின்னிட்டு வாதியிடம் மேற்படி காசோலை தொகையை வா.சா.ஆ.3ல் வரவு வைக்க கேட்டேனா என்றால் இல்லை. நான் மாதம் ரூ.3,000/- வீதம் வட்டி பணமாக 1ம் வாதிக்கு மூன்றரை வருடங்களாக கொடுத்துள்ளேன். மேற்படி வட்டி பணம் கொடுத்தது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் வாதி எனக்கு எதன் அடிப்படையில் பணம் கொடுத்தார் என்றால் நான் வேலை பார்த்த கடைக்கு 1ம் வாதி வந்து செல்வார். அதன் அடிப்படையில் பழக்கமானார். அவர் வட்டிக்கு பணம் கொடுப்பதாக தெரிவந்து நான்தான் வட்டிக்கு பணம் கேட்டேன்.

3. வா.சா.ஆ.3ல் குறிப்பிட்டுள்ள முகவரியில் நான் தற்போது வசித்து வருகிறேனா என்றால் அங்குதான் வசித்து வருகிறேன். வாதி தரப்பில் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு 18.05.2022 ல் வழங்கப்பட்டது என்றால் எனக்கு அறிவிப்பு வரவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.5ல் வழக்கறிஞர் அறிவிப்பில் கண்டுள்ள முகவரியில்தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி எனது சரியான முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்றும் அதை நான் வேண்டுமென்றே பெற்றுக்கொள்ளாமல் திரும்ப அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் 1ம் வாதியிடம் ரூ.1,50,000/- காசோலை பணம் கொடுத்ததை வரவு வைக்காதது சம்மந்தமாக 1ம் வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு நீதிமன்றத்தில் இவ்வழக்கு சம்மந்தமான அழைப்பாணை கிடைக்கப்பெற்று பின்னர் இவ்வழக்கில் ரூ.1,50,000/- காசோலை மூலமாக பணம் கொடுத்ததை பற்றி எதிர் கோரிக்கை கோரியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் 1ம் வாதிக்கும் நீண்ட கால பழக்கம் என்றும் அடிக்கடி கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றும், நான் காசோலையாக ரூ.1,50,000/- தொகை கொடுத்துள்ளதற்கும் இவ்ழக்கு தொகைக்கும் சம்மந்தம் இல்லை என்று

சொன்னால் சரியல்ல. 1ம் வாதி அடமான பத்திரம் படியாக ரூ.2,50,000/- மற்றும் வட்டி தொகை செலுத்தக் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னர் நான் 1ம் வாதிக்கு ஏற்கனவே ரூ.1,50,000/- காசோலையாக கொடுத்துவிட்டதாக சொல்வது சம்மந்தமாக காவல்நிலையத்தில் அல்லது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் வாதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் நான் வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனக்கு கடன் வாங்குதல் மற்றும் கடன் கொடுத்தல், கடன் பைசல் செய்தல் சம்மந்தமான விவரங்கள் நன்றாக தெரியும் என்றும், இந்நிலையில் 1ம் வாதி அடமான கடனை ஏமாற்றும் நோக்கில் நான் காசோலை மூலமாக ரூ.1,50,000/- 1ம் வாதிக்கு ஏற்கனவே கொடுத்து பகுதி தொகையை பைசல் செய்துவிட்டதாக பொய்யான கட்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தனியார் வங்கியில் ரூ.5,00,000/- கடன் பெற்று 1ம் வாதியிடம் பெற்ற தொகையில் பகுதி கடனாக ரூ.1,50,000/- கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.3ல் மேற்படி பகுதி தொகை ரூ.1,50,000/- வரவு வைக்கப்படவில்லை என்பதால் நான் மேற்படி ரூ.1,50,000/- காசோலை 1ம் வாதி அடமான கடனை பைசல் செய்ய கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள சாட்சியம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வாதி கோரியுள்ள அசல் மற்றும் வட்டி தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் வாதியின் வழக்கு தாவாப்படி தீர்ப்பு ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd.A.Mohamed Ali
Additional Subordinate Judge,
Kancheepuram.